செ.வெ.எண்.12 நாள் : 06.01.2017

# அரியலூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை முதன்மை செயலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., அவர்கள் இன்று (06.01.2016) நேரில் சென்று பார்வையிட்டார்.

அரியலூர் மாவட்டம், அரியலூர், ஜெயங்கொண்டம் மற்றும் ஆண்டிமடம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் வறட்சியால் பாதிப்படைந்த விவசாய நிலங்களை அரசு தலைமை கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தலைமையில், முதன்மை செயலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மற்றும் மாவட்ட கண்காணிப்பாளர் **திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப.,** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் முன்னிலையில் இன்று (06.01.2016) நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

தமிழ்நாடு அரசு தமிழகத்தின் வறட்சி காரணமாக பாதிப்படைந்த விவசாய நிலங்களை வருகிற ஜனவரி 9-ம் தேதிக்குள் மாவட்ட ஆட்சியர்கள், அமைச்சர்கள் தலைமையிலான குழுக்கள் உடனடியாக நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து ஜனவரி 10-ம் தேதி தமிழக அரசுக்கு அறிக்கை வழங்கப்படவுள்ளதைத் தொடர்ந்து, அரியலூர் ஒன்றியம், இலுப்பையூர், ஆனந்தவாடி கிராமத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்காசோளம் பயிரிடப்பட்ட நிலத்தினையும், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், வாரியங்காவல் கிராமத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட உளுந்து பயிரிடப்பட்ட நிலத்தினையும், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், தண்டலை கிராமத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட நெல் பயிரிடப்பட்ட நிலங்களை பார்வையிடப்பட்டுள்ளது.

இவ்வாய்வின்போது, குன்னம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.ராமச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திரு.ரெங்கராஜன், உதவி இயக்குநர் ஊராட்சிகள் திருமதி.கங்காதாரணி, கோட்டாட்சியர்கள் (அரியலூர்) திரு.மோகனராஜன், (உடையார்பாளையம்) திருமதி.டினாகுமாரி, வட்டாட்சியர்கள் (அரியலூர்) திரு.முத்துகிருஷ்ணன், (ஜெயங்கொண்டம்) திரு.திருமாறன், வேளாண் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், அரியலூர்.